# V.K.பழனிச்சாமி கவுண்டர் வாழ்க்கை வரலாறு

கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூரில் திரு.R.P.கருப்ப கவுண்டர் மற்றும் வெள்ளையம்மாள் தம்பதியருக்கு 28.02.1899 அன்று பிறந்தார். இவருடன் பிறந்தோர் 6 சகோதரர்களும், 2 சகோதரிகளும் ஆவார்கள்.

திரு.V.K.பழனிச்சாமி கவுண்டர் ஆரம்ப கல்வி ஸ்ரீரங்கத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். தனது தந்தையார் மறைவை தொடர்ந்து சொந்த ஊர் திரும்பினார். அதன்பின் திரு.R.P.கருப்ப கவுண்டர் குடும்பத்தின் கர்த்தாவாக இருந்து திறம்பட நிர்வகித்து இப்பகுதியில் பெரும் புகழை ஈட்டினார். மேலும் தன்இளம் வயதில் நாடு சுதந்திரம் அடையவேண்டும் என்ற வேட்கையோடு இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து பணியாற்றினார். மேலும் மக்களுக்கு பணியாற்ற பொள்ளாச்சி தாலூக்கா போர்டு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1933ஆம் ஆண்டு பொள்ளாச்சி நிலவள வங்கி ஸ்தாபித்து அதன் தலைவராக 1969ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 36 ஆண்டுகள் சேவை புரிந்தார்.

1937ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டமன்றத்தின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தன்னுடைய முதல் சட்டமன்ற உரையில் பொள்ளாச்சி பகுதியில் நிலவிய கடும் வறட்சியும், மறுபுறம் ஆனைமலை குன்றுகளின் மற்றொரு பகுதியில் பயனில்லாமல் கடலுக்கு சென்ற பரம்பிக்குளம் ஆற்றின் குறுக்கே அணைகட்டி தண்ணீரை இப்பகுதிக்கு திருப்பிவிட்டால் செழிப்படையும் என்பதை எடுத்துரைத்து பரம்பிக்குளம் ஆழியாறு அணை கட்டவேண்டும் என்ற கோரிக்கையை முதன் முறையாக சட்டப்பேரவையில் பதிவு செய்தார்.

அப்போதைய கோயம்புத்தூர் ஜில்லா போர்டு என்பது ஒருங்கிணைந்த கோவை மாவட்டமான கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி, தற்போதைய கர்நாடக மாநிலத்தில் கொள்ளேகால் வரை எல்லைகளை கொண்டிருந்தது. மேற்படி ஜில்லா போர்டின் தலைவராக 1939ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் தலைவராக 1953ஆம் ஆண்டுவரை தொடர்ந்து செயல்பட்டார். கோவை ஜில்லாபோர்டு தலைவராக பணியாற்றிபோது அனைத்து கிராமங்களிலும் கல்விக்கூடங்களை உருவாக்கி கல்விக்கு அரும்பணியாற்றினார்.

1940ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தனிநபர் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டார். அதற்காக பிரிட்டிஷ் அரசால் கைதுசெய்யப்பட்டு 6 மாதம் சிறைதண்டனை விதிக்கப்பட்டு சிறைக்கு சென்றார்.

மேலும் சுதந்திர இந்தியாவில் 1952ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக கோயம்புத்தூர் கோயில்பாளையம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டம் தொடர்பாக அனைத்து அரங்கங்களிலும் தொடர்ந்து பேசி தனது கருத்தை பதிவு செய்துவந்தார். மேலும் 1955ஆம் ஆண்டில் தேசிய எண்ணெய்வித்துக்கள் கமிட்டி உறுப்பினராக மத்திய அரசால் நியமிக்கப்பட்டார்.

திரு.V.K.பழனிச்சாமி கவுண்டர் அவர்களின் பெரும் முயற்சியால் அப்போதைய மாண்புமிகு முதல்வர் K.காமராசர் மற்றும் அப்போதைய நீர்பாசனத்துறை அமைச்சர் மாண்புமிகு.திரு.கக்கன் அவர்களையும் தொடர்ந்து வழியுறுத்தியதால் திரு.ஆனந்தராவ் என்ற பொறியாளரை திட்டம் குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க நியமனம் செய்யப்பட்டார்.

மேற்படி பொறியாளர் ஆனந்தராவ் மற்றும் திரு.V.K.பழனிச்சாமி கவுண்டர் ஆகிய இருவரும் இணைந்து சென்று ஆய்வு செய்து அணைகட்டுவது சாத்தியமான ஒன்று என அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

அதனை தொடர்ந்து 1956ஆம் ஆண்டு பரம்பிக்குளம் ஆழியாறு பாசனதிட்டத்தின் உயிர்நாடியான பரம்பிக்குளம் அணை கட்டுமானபணி தொடங்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு அப்போதைய பாரத பிரதமர் மாண்புமிகு ஜவஹர்லால் நேரு அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. மேலும் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனதிட்டம் தொடங்க மாண்புமிகு.திரு.C.சுப்பிரமணியம் மற்றும் அருட்செல்வர் திரு.N.மகாலிங்க கவுண்டர் ஆகியோர் உறுதுணையாக இருந்தார்கள்.

மேலும் 04.05.1957 அன்று சட்ட மேலவையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றுக்கொண்டார். 1957 முதல் 1969 வரை ஏறத்தாழ 12 ஆண்டுகள் சட்ட மேலவையின் துணைதலைவராகவும், பணியாற்றியுள்ளார்.

மேலும் ஆழியாறு அணை 1957ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1962ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. அப்போதை முதல்வர் மாண்புமிகு.காமராசர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அழுக்குசாமியார் ஜீவசமாதியானதும் சமாதி கட்டியும் 1931ஆம் ஆண்டு அழுக்குசாமியார் கோயிலை வேட்டைக்காரன்புதூர் கிராமத்தில் நிறுவினார். அருள்மிகு தெய்வகுளம் காளியம்மன் திருக்கோயில் மற்றும் 4 திருக்கோயில்களுக்கு பரம்பரை அறங்காவலராக இருந்து நிர்வாகம் செய்துவந்தார். மேற்படி திருக்கோயில்களுக்கு சுமார் 42 ஏக்கர் பரப்புள்ள பூமியை தானமாக வழங்கியுள்ளார்.

மேலும் மேற்படி திரு.V.K.பழனிச்சாமி கவுண்டர் அவர்களின் வாழ்நாள் குறிக்கோளான பரம்பிக்குளம் - ஆழியாறு பாசனத்திட்டம் உருவாக வேண்டும் என்ற பெரும் நோக்கோடு உழைத்து அதில் வெற்றியும் பெற்றார். இப்பாசனத்திட்டத்தால் சுமார் 4 லட்சம் ஏக்கர் பரப்புள்ள பூமி பாசனவசதி பெறமுடிந்தது. இதன் காரணமாக திரு.V.K.பழனிச்சாமி கவுண்டர் பரம்பிக்குளம் - ஆழியாறு பாசனத்திட்டத்தின் தந்தை என்று இப்பகுதி மக்களால் அழைக்கப்பட்டுவருகிறார்.

திரு.V.K.பழனிச்சாமி கவுண்டர் 28.07.1971-இல் காலமானார்.